செ.வெ.எண்: 21 நாள்: 06.02.2017

# பத்திரிகைச் செய்தி

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்டுள்ள நீதிப்பேராணை மனு W.P(M.D) No:16485/2015 நாள்:31.01.2017-ன் படி வழங்கப்பட்டுள்ள உத்தரவின்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய்த்துறை, நகராட்சி, பேரூராட்சி, கிராம ஊராட்சிகளில் தனியாருக்கு சொந்தமான பட்டா இடங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் அனைத்தையும் வருகின்ற 07.02.2017-க்குள் நிலத்தின் உரிமையாளர்கள் தங்கள் சொந்த செலவில் வேருடன் வெட்டி அப்புறப்படுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சீமைக்கருவேலமரங்களால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் நோக்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனையின்படி, புதுக்கோட்டை மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலக அதிநவீன வீடியோ வாகனம் மூலம் இன்று (06.02.2017) புதிய பேருந்து நிலையத்தில் விழிப்புணர்வு வீடியோ படக்காட்சி நடத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு படக்காட்சியினை பொதுமக்கள் பார்த்து பயன்பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு.பா.ஜாண் ஜெகத் பிரைட், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திரு.க.பிரபாகரன் (செய்தி), திரு.ரா.ராமசுப்பிரமணியன் (விளம்பரம்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**